**செய்தி வெளியீடு** **நாள் : 15.11.2024**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வருகின்ற 30-ஆம் தேதி சென்னை, வால்டாக்ஸ் ரோட்டில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ சார்பில் 1,476 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகளை தொடங்கி வைக்க உள்ளார்.

## அனைத்து குடியிருப்புக் கட்டிடங்களும் தகுதியான பயனாளிகளுக்குதான் தேர்வு செய்து கொடுக்கிறோம்.

## மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்:

••••••••

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (15.11.24) சென்னை, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான பழைய பொது பண்டக சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ சார்பில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகள் கட்டடம் கட்டுதல் தொடர்பாக மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

**மாண்புமிகு தமிழ முதல்வர் அவர்களுடைய** நேர் கண்காணிப்பில் தமிழ்நாட்டின் **துணை முதலமைச்சர் அவர்களுடைய** பல்வேறு நிலைகளில் அவருடைய வழிகாட்டுதலின்படி வட சென்னை வளர்ச்சி திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட 228 பணிகள் பல்வேறு துறையை சார்ந்த பணிகள் சுமார் 5,418 கோடி அளவிற்கு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதில் 140 பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. மீதப் பணிகளையும் விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென்று **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களின் உத்தரவின்பேரில் வாட்டர் பேசன் சாலை என்று அழைக்கப்படுகின்ற தண்ணீர் தொட்டி தெரு, வட சென்னை கூட்டுரவு பண்டக சாலை ஏற்கெனவே அமைந்திருந்த இடம் இந்த இரண்டு இடங்களில் சுமார் 1,471 குடியிருப்புகள் கட்டுவதற்குண்டான கட்டுமானப் பணிகளை வருகின்ற 30 ஆம் தேதி மாலை 4 மணியளவில் **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களே வட சென்னையை வாடா சென்னையாக ஆக்குவோம் என்ற வார்த்தையை மெய்பிக்கும் வகையில் சாலையோரம், கால்வாய்யோரம் குடியிருக்கின்ற மக்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதி செய்கின்ற வகையில் நேரடையாக வருகை தந்து அவருடைய பொற்கரங்களால் இந்த குடியிருப்பு திட்டங்களுக்கான துவக்க விழாவை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்** துவக்கவுள்ளார்கள்.

இன்றைக்கு ஆய்வினை மேற்கொள்வதற்காக நம்முடைய வடக்கு சென்னை பெருநகரத்தின் பொருப்பாளர், வட்டார துணை ஆணையர் அன்பிற்கினிய திரு.கட்டா ரவி தேஜா, அவர்களும், சென்னை

Verified RealEstate™

பெருநகர குடிநீர்வழங்கல், கழிவுநீரகற்று வாரிய அதிகாரிகளும், மின்சாரத் துறை அதிகாரிகளும் இன்றைக்கு ஆய்வு செய்திருக்கிறோம். இன்று இந்த இரண்டு இடங்களில் நடைபெறும் கட்டுமானப் பணிகளின் துவக்க விழா நிகழ்வை வாட்டர் பேசன் சாலையில் துவக்குவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே 200 மற்றும் 225 சதுர அடி பரப்பளவில் இருந்த குடியிருப்புகளை **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** நிதி சுமையிருந்தாலும் பல்வேறு கால கட்டங்களில் அதே அளவு கட்டினால் கூடுதலாக வீடுகள் கட்டலாம், நிதியும் குறைவாக உள்ளது என்ற கோரிக்கை வைத்தபோது மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு 400 சதரடியில்தான் குடியிருப்பு இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டு அப்படி அதிக குடியிருப்புகள் தேவை என்றபொழுது G + 9 வரை கட்டிகொள்ளலாம் என்று உத்தரவிட்டுள்ளதால் தற்பொழுது 400 சதுரடிக்கு மேலாக தான் ஒவ்வொரு குடியிருப்பும் கட்டப்பட்டு வருகிறது. நமது நிருபரின் கோரிக்கையை வந்திருக்கின்ற மக்களின் கோரிக்கைகயை தெரிந்துக்கொண்டு எந்த அளவு மக்கள் விருப்பத்திற்கு ஏற்றால்போலு மாற்றங்கள் செய்ய முடியுமோ அந்த அளவு மாற்றங்களை ஏற்படுத்தி தருவோம். தற்போது கட்டப்பட்டுவரும் குடியிருப்புகள் முழுமையாக அதற்கு தகுதியான பயனாளியைதான் தேர்வுசெய்ய இருக்கிறோம் என்பதைவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திரு.ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, செயற்பொறியாளர் திரு.லோகேஸ்வரன், சென்னை குடிநீர் வழங்கல் துறை மேற்பார்வை பொறியாளர் திரு.ராதாகிருஷ்ணன், செயற்பொறியாளர் திரு.ஆனந்த்குமார், மாமன்ற உறுப்பினர் திரு.ராஜேஷ் ஜெயின் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.